இன்றைய செய்தி நாளைய வரலாறு




# முரசொலி

Murasoli

www.murasoli.in — நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி — murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 273 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – வைகாசி 01 – வெள்ளிக்கிழமை 15 மே 2026 – சென்னை 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 273 : Thiruvalluvar Year - 2057 - Vaikasi 01 - Friday 15 May 2026 - Chennai 8 Pages ₹ 5.00






சென்னை அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கத்தில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம் நடைபெற்றபோது எடுத்தபடம்!

## சூரியன் மறைவது மீண்டும் உதிப்பதற்காகவே; தோல்வி தற்காலிகமே!

# வெற்றியை நோக்கிப் பயணிப்போம்!

## மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**சென்னை, மே 15-**

**“சூரியன் மறைவது மீண்டும் உதிப்பதற்காகவே ; தோல்வி தற்காலிகமே, வெற்றியை நோக்கிப் பயணிப்போம்” என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் உரையாற்றும்போது உறுதி படக் கூறினார்.**

சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேற்று (14.05.2026) நடைபெற்ற தி.மு. கழக மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

என்ன ஆனாலும் சரி, சூரியன் ஒரு போதும் மறையாது. திரும்ப உதித்தே தீரும். சூரியன் இல்லாமல் எதுவும் நடக்காது. இது இயற்கை நியதி மட்டுமில்ல, தமிழ்நாட்டு அரசியல் நியதியும் இதுதான்.

நடந்து முடிந்த தேர்தலில் எந்தக் கட்சிக்கும் ஆட்சி அமைக்கும் அளவுக்கு பெரும்பான்மை கிடைக்கவில்லை. இப்ப அமைந்திருக்கும் அரசும், கூட்டணிக் கட்சிகளோட தயவாலதான் ஆட்சியை அமைச்சிருக்கு. அதுவும் நம்ம கூட சேர்ந்து வெற்றி பெற்றவர்களின் ஆதரவோடதான் ஆட்சி அமைஞ்சிருக்கு.

நமக்கு பெரும்பான்மை கிடைக்கலயே தவிர, கணிசமான எண்ணிக்கையில வாக்குகள் கிடைச்சிருக்கு.

கொஞ்சம் வரலாற்றை திரும்பிப் பார்த்தால் 1989ல நாம ஆட்சி அமைச்சோம். அடுத்து நடைபெற்ற 1991 தேர்தலில் வெறும் இரண்டு இடங்களில் மட்டுமே ஜெயிச்சோம்....96 ல மீண்டும் நம்ம ஆட்சி ஆனா அடுத்து வந்த 2001 தேர்தலில் நாம வென்ற இடங்கள் 37 தான்...அதே போல 2006 ல



மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றும் காட்சி!

தி.மு.க. ஆட்சி அமைச்ச 2011ல வெறும் 31 இடங்கள் தான்!

### வாக்குவித்தியாசம் என்பது வெறும் 3.52 விழுக்காடுதான்!

இப்படி ஆட்சியில் இருந்து தோற்ற போதெல்லாம் நாம் மிகக் குறைந்த இடங்களிலேயே வென்றிருக்கிறோம். இப்பொழுது 59 இடங்களில் வென்றிருக்கிறோம். கூட்டணி எண்ணிக்கையை எல்லாம் சேர்த்துப் பார்த்தால் 73 இடங்கள். கடந்த முறைகளை ஒப்பிடும்போது இது கூடுதல் எண்ணிக்கை. நமக்கும் அவர்களுக்குமான வாக்கு விழுக்காடு வேறுபாடு என்பது 3.52 விழுக்காடுதான்.

இப்ப நம்மளை பார்க்குற எல்லாருமே, ஏன் சோஷியல் மீடியாலயுமே, “எப்படியும் தி.மு.க.தான் ஜெயிக்கும்னு நினைச்சோம். அதனால, என்னோட ஒரு ஓட்டுல என்னாகிடும்னு தெரியாம போட்டுட்டோம்”னு புலம்புறாங்க.

அதுமட்டுமில்ல,

“இப்படி ஒரு கட்சிக்கு வோட்டு போட்டு ஆட்சியில உட்கார வெச்சிட்டோமேன்னு பலரும் வருந்தி பதிவு போடுறதையும் பார்க்குறேன்.

இதுதான் நம்ம ஐந்தாண்டு கால நல்லாட்சிக்கு கிடைச்ச அங்கீகாரம்.

நம்ம உழைப்புக்கு கிடைச்ச சான்று!

ஆனா, அது வெற்றியா மாறாம போயிடுச்சு.

பொதுவாழ்க்கைக்கு வந்தா வெற்றி தோல்வி சகஜம்.

ஏற்ற இறக்கங்கள் இருக்கும்.

மேடு பள்ளங்கள் இருக்கும்.

அதுதான் அரசியல்.

அண்ணா கலைஞர் கற்றுத் தந்த பக்குவம்!

இந்தப் பக்குவம் வேற யாரையும் விட நமக்குத்தான் அதிகம்.

இதுதான், பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களும் தலைவர் கலைஞர் அவர்களும் நமக்கு கற்றுத் தந்திருக்கிற பக்குவம். அதனாலதான், மத்த கட்சிகள் மாதிரி நம்ம MLAக்களை ரெசார்ட்ல, நட்சத்திர விடுதில ஒளிச்சு வைக்க வேண்டிய பயமில்லாம தோல்வியலயும் நாம தைரியமாவே இருந்தோம்.

என்னைப் பொறுத்தவரையில, கடந்த ஐந்தாண்டு காலமும் கடுமையா உழைச்சேன். உங்களையும் உழைக்க வெச்சேன்.

என் சக்திக்கு மீறியும் உழைச்சேன். உங்களையும் ரெஸ்ட்டே இல்லாம உழைக்க வெச்சேன்.

இதுவரை எந்த அரசும் செஞ்சு தராத சாதனைகளை நாம செஞ்சு கொடுத்தோம்.

கோடிக்கணக்கான மக்களுக்கு நேரடிப் பயன் தரும் ஆட்சியா நம்ம ஆட்சி இருந்தது.

இது மக்களுக்குத் தெரியும்.

இருந்தாலும் நாம ஆட்சி அமைக்க முடியல. இதுக்காக, நான் யாரையும் சுட்டிக் காட்டி குறை சொல்ல விரும்பல. தோல்விக்கான காரணங்களை கழக நிர்வாகிகள் தொடங்கி, பொதுமக்கள் வரை எல்லா விதமாவும் பேசுறாங்க.

## உடன் பிறப்புகள் வெளிப்படையாக தகவல் சொல்ல தனி ‘வெப்சைட்’!

ஒருத்தர் இன்னொருத்தரை குற்றம் சொல்லுறாங்க. அவர் இன்னொருத்தரை கை காட்டுறாரு. இப்படி மாத்தி மாத்தி, குற்றம் சொல்லிகிட்டே இருந்தா, இதுக்கு ஒரு முடிவே இருக்காது.

அப்ப, இதுக்கு யாருதான் பொறுப்பு? யாரும் யாரையும் குறை சொல்லாதீங்க.

### அடுத்தவர் மீது பழி போட வேண்டாம்!

கழகத்தின் தலைவர் என்ற முறையில, நானே இந்தத் தோல்விக்கு பொறுப்பேத்துக்குறேன். இதுதான் நிதர்சனம்.

வெற்றி கிடைச்சா அதோட பெருமையை அடையும் நான்,

தோல்விக்கான பொறுப்பையும் ஏத்துக்குறதுல எந்த தப்பும் இல்ல. அதுதான் நியாயம்.

நீங்களும் இந்த தோல்விக்காக, அடுத்தவர் மேல பழி போடாதீங்க.

எல்லாரும் என்ன சொல்றாங்க?

அப்படி செஞ்சிருக்கலாம்,

இப்படி செஞ்சிருக்கலாம்,

அது நடக்கல, இது நடக்கல,

அவரு கண்டுக்கல, இவரு கண்டுக்கலனு பழி போடுறாங்க.

தயவு செஞ்சு இனிமே அதை பண்ணாதீங்க.

தோல்வியின் போது ஆதங்கத்தை கொட்டுவது இயல்பானதுதான்...ஆனால் அது பழியாக இருக்கக் கூடாது...ஆய்வு செய்வது அவசியம்தான் ஆனால் அடுத்தவர் மீதான அவதூறாக இருக்கக் கூடாது...

இந்த தேர்தலில் நடந்திருப்பது புதுவிதமான கவர்ச்சி மாயாஜால சுனாமி.

சுனாமினா சாகசமோ, சாதனையோ கிடையாது. பெரும் பாதிப்பு என்ற

மீனிங்ல சொல்றேன். தமிழ்நாட்டின் நலன்களை பாதிச்சிருக்க சுனாமி பேரழிவு

இது.

தமிழ்நாட்டு மக்களை இதுல இருந்து, எப்படி மீட்டெடுக்க போறோம்.

அதை பத்தி யோசிங்க.

எங்க கோளாறு நடந்துச்சு?

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

---

### மாதம் 2,500 ரூபாய்னு சொல்லிட்டு

## 1000 ரூபாய் கூட தராம இழுத்தடிப்பதுதான் உங்க மாற்றமா?

### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் கேள்வி!

**சென்னை, மே 15 -**

**“மாதம் 2,500 ரூபாய்னு சொல்லிட்டு 1000 ரூபாய் கூட தராம இழுத்தடிப்பதுதான் உங்க மாற்றமா?” என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முதல்வருக்கு கேள்வி எழுப்பியுள்ளார்.**

**இதுகுறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-**

**மே 2026 மாதத்திற்கான கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பயனாளிகளின் வங்கிக் கணக்கில் விரைவில் வரவு வைக்கப்படும் என்று முதலமைச்சர் ச. ஜோசப் விஜய் உத்தரவிட்டுள்ளார்.**

**இது தொடர்பான அரசாணையில்,**

பெண்களுக்கு மாதந்தோறும் ரூ.1000/ உரிமைத்தொகையாக வழங்கப்பட்டு வரும் கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டத்தினை மறுசீரமைப்பு செய்ய அரசுக்கு உரிய கால அவகாசம் தேவைப்படுகிறது என்றும்,

மே 2026 மாதத்திற்கான கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, பயனாளிகளின் வங்கிக் கணக்கில் விரைவில் நேரடியாக வரவு வைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதுகுறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலை தளப் பதிவில் பதிவிட்டுள்ளதாவது:-

**மே மாசத்துக்கான கலைஞர் மகளிர் உரிமைத் தொகையை 15 ஆம் தேதி வரவு வைக்கணும்.**

**ஏற்கனவே உள்ள திட்டத்தைத் தொடர இப்ப எதுக்கு அவகாசம்? என்ன மறுசீரமைப்பு பண்ண போறீங்க?**

**திராவிட மாடல் அரசின் மக்கள் நலத்திட்டங்கள் தொடரும்னு நேத்துதான சட்டப்பேரவையிலயே சொன்னீங்க?**

**மாசம் 2,500 ரூபாய்னு சொல்லிட்டு, ஆயிரம் ரூபாய கூட தராம இழுத்தடிக்கிறதுதான் உங்க மாற்றமா?**

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலை தளத்தில் பதிவிட்டுள்ளார்.

---

## மே மாத மகளிர் உரிமைத் தொகை கிடையாதாம்!

### மகளிர் அதிர்ச்சி – ஏமாற்றம்!

*சென்னை, மே 15-*

*மே மாதத்திற்கான மகளிர் உரிமைத் தொகை இன்று கிடையாது என்று முதலமைச்சர் விஜய் அறிவித்துள்ளது மகளிர் இடையே பெரும் ஏமாற்றத்தையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.*

*மகளிருக்கு உரிமைத் தொகை வழங்கும் திட்டம் தமிழ்நாட்டில் திராவிட மாடல் ஆட்சியில் தொடங்கப்பட்டது. ஆயிரம் ரூபாய் உரிமைத்தொகை ஒவ்வொரு மாதமும், 15ம் தேதி வங்கிக் கணக்கில் தவறாமல் வரவு வைக்கப்பட்டு வந்தது. ஒரு கோடியே 31 லட்சம் மகளிர் பயன் பெற்று வந்தனர். தமிழ்நாட்டில் புதிதாக தவெக அரசு பொறுப்பேற்றவுடன் மகளிர் உரிமைத்தொகை தொடர்ந்து கிடைக்குமா? என்று மகளிர் மத்தியில் கவலை எழுந்தது.*

*இந்த நிலையில், மே மாதத்திற்கான மகளிர் உரிமைத் தொகை இன்று வரவு வைக்கப்படாது என்று முதலமைச்சர் விஜய் அறிவித்துள்ளது மகளிர் இடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இன்று மகளிர் உரிமைத்தொகை வரவு வைக்கப்படும் என எதிர்பார்த்திருந்த நிலையில், விரைவில் வரவு வைக்கப்படும் என சமாளிக்கும் வகையில் த.வெ.க. அரசு விளக்கமளித்துள்ளது.*

*மகளிர் உரிமைத்தொகைத் திட்டத்தினை மறுசீரமைப்பு செய்ய அரசுக்கு கால அவகாசம் தேவை என முதலமைச்சர் விஜய் அறிவித்திருப்பதால் மகளிர் மேலும் அதிர்ச்சியடைந்துள்ளனர். மறுசீரமைப்பு என்ற பெயரில் பயனாளிகளின் எண்ணிக்கையை குறைக்க த.வெ.க. அரசு திட்டமிட்டிருப்ப தாகவும் அதிர்ச்சித் தகவலும் வெளியாகி உள்ளது.*

*முதலமைச்சர் விஜயின் உத்தரவால், திராவிட மாடல் ஆட்சியில் பலன் பெற்று வந்த ஒரு கோடியே 31 லட்சம் மகளிர் பெரும் ஏமாற்றமடைந்துள்ளனர்.*